(ஆ) பாசனத்திற்கு தண்ணீரின்றி கரூர் பகுதியில் பயிர்கள் காய்தல்.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, ''கடந்த 15 நாட்களாக அமராவதி நதியில் பாசனத்திற்குத் தண்ணீர் விடாததால் கரூர் பகுதியில் பயிர்கள் சாய்ந்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பாசனத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

அமராவதி நீர்த்தேக்கத்தின் மூலம் 21,500 ஏக்கர் புதிய நிலங்களும் 31,200 ஏக்கர் பழைய நிலங்களும் பாசனம் பெறும். இந்நிலங்கள் கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி, பெரியார் மாவட்டங்களில் உள்ளன. முதல் போகம் எல்லா நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இரண்டாவது போகம் 17,300 ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படுகிறது. இந்த நிலங்களில் பாசன காலம் ஜூன் மாதம் முதல் மார்ச் 31 தேதி வரை ஆகும். புதிய பாசனத்தின் பாசன காலம் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து ஜனவரி 31-ம் தேதி வரை ஆகும்.

2. அமராவதி நீர்த்தேக்கத்தின் நீர் வழங்கும் விதி முறைகளின்படி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நீரின் அளவு நிர்ணயிக்கப்பட்டு இந்த அளவுக்கும் அதற்குக் கீழும் நீர்த்தேக்கத்திற்கு அன்றாடம் வரும் நீர் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்காக அனுப்பப்படுகிறது. இதைத் தவிர நீர்த்தேக்கத்தில் தேக்கப்படும் கொள்ளளவில் ஒரு பகுதி பழைய பாசனத்திற்கு எப்போது தேவைப்படுகிறதோ அப்பொழுது அனுப்பப்படும்.

3. 1982-83 ஆம் ஆண்டு தென் மேற்கு, வட கிழக்கு பருவ மழை அமராவதி நீர்த்தேக்கத்தின் நீர் பிடிப்பு பகுதியில் நீர்த்தேக்கத்தில் வந்த நீரின் அளவு அதே பருவத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி நீரின் அளவை விட 50 விழுக்காடு களுக்கு குறைவாகும். 1.6.82 அன்று அமராவதி நீர்த்தேக்கத்தில் இருந்த நீரின் கொள்ளளவு 543 மி.கன அடி. (முழு கொள்ளளவு 4047 மி. கன அடி) தென் மேற்கு பருவ மழை தவறியதாலும், குறைந்த அளவு நீர் வந்ததாலும் அமராவதி பழைய நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் 28.7.82 அன்று விடப்

பட்டது. அமராவதி புதிய பாசனத்திற்கு (பாசனத்திற்காக திறக்கப்படவேண்டிய நாள் 1-8-82 ஆகும்) தண்ணீர் விடுவது 1-8-82க்கு அப்பால் ஒத்தி வைக்கப்பட்டது. நீர்த்தேக்கத்தில் நீரின் கொள்ளளவு குறைவாக இருந்ததாலும் நீர் வரத்தும் குறைவாக இருந்ததாலும் பாசன ஆரம்ப காலம் முதற்கொண்டு சிரமங்கள் இருந்து கொண்டிருந்தன. பழைய ஆயக்கட்டு நிலங்களில் உள்ள விவசாயிகளுடன் ஒரு கூட்டத்தில் கலந்து ஆலோசித்து பாசனத்திற்காக தண்ணீர் விட்டு விட்டுக் கொடுக்கப் பட்டது. இதனால் 16,800 ஏக்கர் நிலங்களில் விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்ட முதல்போக பயிர் நல்லமுறையில் அறுவடை செய்யப்பட்டது.

4. 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீர்த்தேக்கத்தில் சுமாரான நீர் வரத்து இருந்தது. இது புதிய பாசனத்திற்கு தேவையான சிறுபகுதி நீரை தேக்கி வைக்க உபயோகப்பட்டது. அமராவதி கூட்டுறவு கரும்பு ஆலை நிர்வாகிகளிடமிருந்தும், அமராவதி கால்வாயின் கீழ் உள்ள விவசாயிகளிடமிருந்தும் அமராவதி கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற கோரிக்கைகள் மிகவும் வலியுறுத்தப்பட்டன. ஆகையால் அமராவதி கால்வாய் 1-12-82 அன்று புன்செய் பயிர் செய்வதற்கு திறந்து விடப்பட்டது. பாசனத்திற்கு வேண்டிய நீர் விட்டு விட்டு அனுப்பப்பட்டது.

5. அமராவதி புதிய பாசனத்திற்கு விடப்படும் நீர் அமராவதி நீர்த்தேக்கத்தில் அதற்குரித்தான கொள்ளளவில் இருந்துதான் விடப்பட்டிருந்தது.

6. அமராவதி நீர்த்தேக்கத்தில் இப்போதுள்ள கொள்ளளவு 1,328 மி. கன அடி. தற்போது நீரின் வரத்து 25 முதல் 40 க்யூசெக் வரை தான் இருக்கிறது.

7. நீர்த்தேக்கத்தில் உள்ள கொள்ளளவையும் அன்றாடம் வரும் நீர் வரத்தையும் கணக்கில் கொண்டு தண்ணீர் விட்டு விட்டு கொடுக்கப்படுகிறது. நீர் விட்டு விட்டு கொடுப்பதால் சில நாட்களுக்குத் தண்ணீர் அனுப்ப முடியாது. பழைய பாசனத்திற்காக அனுப்பப்படும் நீர் அமராவதி ஆற்றின் அகன்ற மணற் பாங்கான வழியாக நெடுந்தூரம் செல்ல வேண்டியிருப்பதால் தண்ணீரின் அளவு விரயமடைகிறது.

8. சாதாரணமாக அமராவதி ஆற்றுடன் கலக்கும் கிளை நதிகளிலிருந்து வரும் நீர் அமராவதி நீர்த்தேக்கத்திலிருந்து அனுப்பப்படும் நீருடன் கலந்து உபயோகிக்கப்படும். ஆனால் தற்போதுள்ள வறண்ட நிலை காரணமாக, இக்கிளை நதிகள் வறண்டு கிடப்பதால் அவற்றிலிருந்து நீர் வரத்து இல்லை.

9. இருந்தபோதிலும், தற்போது இருக்கும் நீரைக்கொண்டு நல்ல வகையில் அதிக பாசன நிலங்களுக்கு தண்ணீர் விடுவதற்கு வேண்டிய முயற்சிகளை தல அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் பகுதியில் அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் ராஜ வாய்க்கால், திருமாறு வாய்க்கால், சுமத்துரத்து வாய்க்கால், புலியூர் வாய்க்கால், பஞ்சமரத்தி வாய்க்கால், கட்டளை வாய்க்கால், மாயனூர் வாய்க்கால் போன்ற பகுதிகளுக்குச் சுமார் 1,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்து விட்டால்தான்,— ஒரு 10 நாட்களுக்கு திறந்துவிட்டால்,— அங்கே இருக்கிற பயிர்களை காப்பாற்ற முடியும். கடைமடைப் பகுதிகளுக்கும் தண்ணீர் பாய்கிற முறையில் ஒரு 1,000 க்யூசெக்ஸ்சாவது, 10 நாட்களுக்காவது விடவேண்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து காய்ந்திருக்கிற பயிர்களைக் காப்பாற்ற முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி நீர்த்தேக்கத்தில் இப்போது கொள்ளளவு 328 மிலியன் கன அடி நீர்தான். தற்போது நீரினுடைய வரத்து 25 முதல் 40 க்யூசெக்ஸ்தான் இருக்கிறது. இதை வைத்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் கேட்டபோது ஒரு 700 க்யூசெக்ஸ் வரை உடனடியாக தண்ணீர் திறந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது கடைப்பகுதியிலே போய் சேரவில்லை என்ற அடிப்படையிலே, ராஜ வாய்க்கால், கட்டளை, மாயனூர் வாய்க்கால் போன்ற கால்வாய்களுக்கு போய்ச் சேரவேண்டுமென்றால், 1,000 க்யூசெக்ஸ்சாவது விட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது நிலைமைகளை ஆராய்ந்து ஒரு 900 க்யூசெக்ஸ் வரை விட்டு பயிர்களை காப்பாற்ற வேண்டுமென்று இப்போது அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 900 க்யூசெக்ஸ் விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை நாட்களுக்குள் விடுவதாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அமராவதி நீர்த்தேக்கத்தின் மூலமாக 2,500 புதிய நிலங்களும், 31,200 பழைய நிலங்களும் பாசன வசதி பெறக்கூடிய ஒப்பந்தம் இருக்கிறது. இங்கே இதை பிரித்து விடுகின்றபோது குறிப்பாக கடைப்பகுதிகளுக்கு என்று ஒட்டுமொத்தமாக நாம் விடமுடியாது. ஒரு 4, 5 நாட்களுக்கு இந்த குறிப்பிட்ட கால அளவில் தண்ணீர் போய்ச் சேர்ந்தால் ஏதாவது பயன் அளிக்குமா என்பதைப் பார்த்து, காலத்தின் அளவை அரசு முடிவு செய்கிறது.